1971 டிசம்பர் 11]

பிருக்கிறார். மதுரை மாவட்ட ஆட்சியாளரும் வைகை அணையில் உள்ள மின் விளக்கு அமைப்பைப் புதுப்பிப்பதற்காக ரூ. 2.14 லட்சத்திற்கு ஓர் மதிப்பீடு அனுப்பியுள்ளார். இத் திட்டம் பற்றி தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களுடன் தொடர்பு கொண்டு விரைவாக அவரது இறுதி அறிக்கையை அனுப்பும்படி அரசு கேட்டிருக்கிறது; வந்தவுடன் பரிசிலனை செய்யப்படும்.

* 276 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(a) whether there is a proposal to extend Vaigai Irrigation scheme in Madurai District including more areas in the system in Tirumangalam taluk; and

(b) if so, the steps taken in this regard?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த வைகைத் திட்டம் முதலிலே திருமங்கலம், உசிலம்பட்டி தாலுக்காக்களிலுள்ள பின் தங்கிய மக்கள் நிறைந்தப் பகுதி—மக்களுக்கும், உரப்பனூர் கண்மாய் மூலமாகவும், சாத்தூர் கண்மாய் மூலமாகவும் அவற்றையொட்டி இருக்கிற பகுதிகளுக்கும் தண்ணீர் விடுவது என்ற அடிப்படையிலே வகுக்கப்பட்டிருந்தாலும், பின் அவை விலக்கப்பட்டாலும்கூட, இப்போதாவது வைகைத் திட்டத்திலே இந்த இரண்டுத் திட்டங்களையும் செயல்படுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, திருமங்கலம் கால்வாயின் கீழ் 10,384 ஏக்கர் நிலப்பரப்புக்குப் பாசன வசதியளிக்க முதலில் திட்டமிடப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்டது. திருமங்கலம் கால்வாயில் சிமெண்ட் பூச்சு செய்யப்பட்டப் பிறகு அதிக பரப்பளவுக்கு திருமங்கலம் தாலுகாவில் 1,095 ஏக்கராவுக்கு நிலக்கோட்டை தாலுகாவில் 920 ஏக்கராவுக்கு ஆக மொத்தம் 2,015 ஏக்கராவுக்கு மட்டுமே பாசன வசதி அளிக்க முடிந்தது. சமீப காலமாக வைகைத் திட்டத்தின்கீழுள்ள ஆயக்கட்டு முழுமைக்கும் பாசன வசதியளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சில வருடங்களில் பாசனத்திற்குத் தண்ணீர் விடும் நாள் தள்ளி வைக்கப்பட்டது. மேலும் பயனடையும் ஆயக்கட்டும் குறைக்கப்பட்டுள்ளது. ஆகவே, இத் திட்டம் செயல்படும் விதத்தை இன்னும் சில ஆண்டுகள் பரிசிலனை செய்த பின்னர் விரிவுபடுத்துதல் குறித்து ஆலோசனை செய்யலாம்.

சித்திரைச்சாவடிக்கருகில் நொய்யலாற்றில் அணை

* 277 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நொய்யல் ஆற்றில் சித்திரைச்சாவடியில் கட்டப்பட்டுள்ள அணையின் உயரம் சில ஆண்டுகளுக்கு முன் கூடுதலாக்கப்பட்டது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. ஏ. ஆர். சுப்பையா : தலைவரவர்களே, ஏற்கனவே அந்த சித்திரைச் சாவடி அணையிலிருந்து முறைப்படி இரண்டிரண்டு மாதங்களுக்கு ஒரு முறை நீர் விடப்பட்டுகூட அணையில் தண்ணீர் இல்லையென்று குறைக்கப்படுகிறது. எனவே, அந்த அணையின் உயரத்தை அதிகப்படுத்தி, தண்ணீரைத் தேக்கி வைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, நொய்யல் ஆற்றின் குறுக்கே உள்ள சித்திரைச்சாவடி அணை மிகவும் பழமையானது. இது கி.பி. 1881-ம் ஆண்டுக்கு முன்னால் அமைக்கப்பட்டது. கடந்த இருபத்தி ஐந்து ஆண்டுகளில் இந்த அணையின் உயரத்தை உயர்த்துவதற்காக எந்தவிதமான அத்தாட்சியும் இல்லை. ஏற்கெனவே இருக்கின்ற நிலையையே இப்போது அனுசரிக்கப்பட்டு வருகிறது.

Demands of Junior Engineers Association, Pollachi

* 278 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the Hon. the Chief Minister has received a charter of demands, dated 5th June 1970 from the Junior Engineers' Association, Public Works Department, Pollachi;

(*b*) if so, the details thereof; and

(*c*) the action taken thereon?

THE HON'BLE THIRU S. J. SADIQ PASHA : (*a*) Yes Sir.

(*b*) (i) Giving Gazetted status to Junior Engineers.

(ii) Interim relief and fixation of pay.

(iii) Promotion chances.

(iv) Difference in pay between Junior Engineers and Supervisors.

(v) Changing the existing ratio of promotion to the post of Assistant Engineer from 3 :1 to 10 :1.

(vi) Only Engineering Graduates to be appointed as Section Officers.

(vii) Permission to undertake part-time employment.

(viii) To appoint a Junior Assistant or Draughtsman III Grade in the Section Office to attend to official matters.

(ix) To create a Division for further implementation of Tamil in the Department.

(x) To abolish direct recruitment to the post of Assistant Engineers.

(xi) Provision of quarters for Junior Engineers.

(*c*) No action was taken by Government since only representation from a recognised Central Association will be given consideration and as the representation was from the Pollachi Branch of Junior Engineers' Association, which itself is not a recognised one.